


மொழிபெயர்ப்பு: *திருமதி. எலிசபெத் மலர்விழி. சா*

அட்வெந்து சிறுவர் ஊழியங்கள்

பரமண்டல ஜெபம்



**நாள் – 1 : தகப்பனிடம் பேசுதல்**

அப்பா அவருக்குப் பிடித்த நாற்காலியில் அமர்ந்தார். அவர் கேட்டி மற்றும் கென்னியை பார்த்து சிரித்து கைகளை நீட்டினார். அவர்கள் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் சிரித்தபடி அவரை நோக்கி ஓடினார்கள்! அவர்கள் மடியில் ஏறியபோது அப்பா அவர்களைத் தன் பெரிய கரங்களில் பிடித்தார். கேட்டி மற்றும் கென்னி இரட்டையர்கள். ஒவ்வொரு மாலையும் இரவு உணவு பிறகு அவர்கள் ஒன்றாக ஜெபிப்பார்கள். அவர்கள் கட்டிப்பிடித்து சிரித்து அரட்டை அடித்த இந்த இன்பமான நேரத்தை அவர்கள் விரும்பினர்.அவர்களின் நாள் பற்றி பேசி ஒன்றாக ஜெபிப்பார்கள். அப்பா அவர்களுக்கு இயேசு தம் சீடர்களுக்குக் கற்பித்த சிறப்பு ஜெபத்தை கற்றுக்கொடுத்தார். நான் உன்னை நேசிக்கிறேன் கேட்டி! நான் உன்னை நேசிக்கிறேன் கென்னி! நான் உங்கள் அப்பா என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!" அப்பா அவர்களின் சுருள் தலையில் முத்தமிட்டார். "நான் உங்களை நேசிக்கிறேன் அப்பா!" என்று கேட்டி அவர் கன்னத்தில் முத்தமிட்டாள். "நீங்கள் என் அப்பா என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்!" என்று கென்னி அவர் காதில் கிசுகிசுத்தான். அவர்கள் தங்கள் பரபரப்பான செய்திகள் பள்ளியில் அவர்களின் மதிப்பெண்கள் மற்றும் சாமின் விருந்துக்கு அழைப்பு பற்றி அப்பாவிடம் சொன்னார்கள்! "இன்று நடந்த சோகமான விஷயம் என்ன?" என்று கேட்டார் அப்பா. கென்னி அவரிடம் கோபமான ஒரு பையனைப் பற்றி கூறினார். "ஓ கென்னி நான் இப்படி நடந்தது என்பதில் மிகவும் வருந்துகிறேன். நீங்கள் நன்றாக உணர நான் என்ன செய்யட்டும்?" என்று கேட்டார் அப்பா. கென்னிக்கு உறுதியாக தெரியவில்லை ஆனால் அதை பற்றி அப்பாவிடம் சொல்வது நன்றாக இருந்தது. கேட்டி தனக்கு பிடித்த கரடி தொலைந்ததால் சோகமாக இருந்தாள். "தூங்கும் முன் டெடியைத் தேட நான் உனக்கு உதவுகிறேன்!" என்று அப்பா அவளுக்கு ஆறுதல் கூறினார். அவர்கள் ஜெபம் செய்தபடி அப்பா அவர்களை அணைத்துக் கொண்டார். " ஒவ்வொரு நாளும் ஒன்றாக நாங்கள் எப்படி கட்டிப்பிடித்து பேசுகிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? அது தேவனுடனான நமது சிறப்பு நேரம் போன்றது! அவர் நம்மை நேசிக்கிறார். நாம் அவருடன் பேசும்போது அவர் அதை அனுபவிக்கிறார். நாம் சோகமாக இருக்கும்போது அவர் நம்மை ஆறுதல்படுத்துகிறார். நாம் மகிழ்ச்சியாக இருக்கும்போது அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார்!" கேட்டி மற்றும் கென்னி புன்னகைத்தனர். பரலோகத்திலுள்ள அவர்களுடைய தகப்பனால் நேசிக்கப்படுவது அற்புதமானது!



**இதை செய்யலாம்**: 

- தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை நினைவூட்ட ஏதாவது செய்யுங்கள். அவர் புன்னகைத்துக்கொண்டே இருக்கிறார் அவர் எப்போதும் உங்களுடன் இருக்கிறார். உங்கள் ஜெபங்களைக் கேட்கத் தயாராக இருக்கிறார்!
- உங்கள் கைகளால் உங்களை சுற்றிக் கொண்டு தேவன் உங்களை அணைக்கிறார் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்! அவர் உங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டிய எந்த நேரத்திலும் இதைச் செய்யலாம்.
- சங்கீதம் 23 103 145 1 கொரிந்தியர் 13 மற்றும் 1 யோவான் 4:7-21 ஆகியவற்றைப் படித்துப் பாருங்கள்.
- தேவன் உங்களை நேசிக்கும் அனைத்து வழிகளை பட்டியலிடவும்!
- ஒரு பெரிய காகித இதயத்தை வெட்டுங்கள். இந்த பெரிய இதயத்தில் உங்கள் பட்டியலை எழுதுங்கள்.
- நித்தியம் முழுவதும் தேவனின் அன்பைப் பற்றி மேலும் மேலும் கற்றுக்கொள்ளுங்கள்.
- காகித இதய மாதிரி - https://artfulparent.com/how-to-cut-outhearts/



**ஜெபிப்போம்**:

- ஜெபத்தின் அற்புதமான பரிசுக்காக தேவனுக்கு நன்றி! எந்த நேரத்திலும் அன்பான தந்தையிடம் பேசலாம். அவர் கேட்டு நம்மை நேசிக்கிறார்.
- தேவனின் அன்புக்கு நன்றி சொல்லி அவரைப் புகழ்ந்து அவர் உங்களை நேசிக்கும் வெவ்வேறு வழிகளை எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் தொடங்கி ஜெபம் செய்யுங்கள்.
- அமைதியாக இருங்கள். தேவனின் அன்பைக் கேளுங்கள். அவர் இன்று உங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த என்ன சொல்வார்?





## நாள் – 2 : பரலோக என் பிதாவே

அப்பா தனது சிறப்பு நாற்காலியில் கேட்டி மற்றும் கென்னியுடன் அமர்ந்தார். மிகவும் சோகமாக காணப்பட்டார்.
அன்று மதியம் அவர்களை பள்ளியிலிருந்து அழைத்து வர மறந்துவிட்டார்! கேட்டியும் கென்னியும் சோகமாக இருந்தார்கள். அவர்களை பள்ளியிலிருந்து அழைத்து வர அப்பா முன் மறந்ததில்லை. மிஸ் பீட்டர்சன் அவர்களின் ஆசிரியை. அப்பாவின் செல்போனை அழைத்தார். கேட்டியும் கென்னியும் அவருக்காகக் காத்திருந்தார்கள் என்று அப்பாவிடம் அவர் நினைவுபடுத்தினார். அப்பா மிகவும் மோசமாக உணர்ந்தார்! அவர் கூடிய சீக்கிரம் வேலையை விட்டுவிட்டு அவர்களை அழைத்துச் செல்ல வந்தார். வழியில் அப்பா அவர்கள் இருவருக்கும் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தார். அவர் எவ்வளவு வருந்தினார் என்பதைக் காட்ட அப்பா கேட்டியையும் கென்னியையும் நெருங்கி அணைத்துக் கொண்டார். "நான் உங்களை நேசிக்கிறேன். நீங்கள் என் சிறப்பான குழந்தைகள் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!" அவரது கன்னத்தில் ஒரு கண்ணீர் துளி கீழே உருண்டது.
“உங்களை இன்று பள்ளியிலிருந்து அழைத்து வர மறந்துவிட்டேன் என்று வருந்துகிறேன். நான் ஒருபோதும் அதை மீண்டும் செய்வதில்லை என்று நம்புகிறேன்!" ”நாங்கள் உங்களை நேசிக்கிறோம் அப்பா!" கேட்டி அவன் மார்பில் பதுங்கிக் கொண்டாள். "நீங்கள் எங்களை விரும்புகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். மேலும் நீங்கள் எங்களை பயமுறுத்தவும் சோகமாக்கவும் விரும்பவில்லை.”"நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன் ஆனால் நான் ஒரு மனித அப்பா. நான் தவறு செய்கிறேன். நான் உன்னை அப்படி காயப்படுத்தியபோது உன்னிடமும் தேவனிடமும் மன்னிப்பு எனக்கு வேண்டும். ”நாங்கள் எப்போதும் உங்களை மன்னிப்போம் அப்பா!" கென்னி கூறினார் ” தேவன் எப்போதும் போல “மன்னிக்கவும்” என்று சொல்லும் போது நம்மை மன்னிப்பார்." ”நன்றி கென்னி!" புன்னகைத்தார் அப்பா.
“பரலோகத்தில் உள்ள அவர்களின் பரிபூரண அன்பான தந்தைக்கு இயேசு தம் சீடர்களுக்கு எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். அவர் ஒருபோதும் நம்மை மறக்காத தந்தை. நம்மை மன்னிக்க எப்போதும் தயாராக இருக்கும் தந்தை அவர். நினைவில் கொள்ளுங்கள். ஒரு பெற்றோராக நான் பல தவறுகள் செய்தாலும் தேவன் உங்களை அதிகமாக நேசிக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் கற்பனை செய்வதை விட அதிகமாக நேசிக்கிறார்! எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்தார். நாம் நமது பரலோகத் தகப்பனிடம் எந்த நேரத்திலும் எதையும் பற்றி பேசலாம் என்பது ஆச்சரியமாக இருக்கிறது!"



**இதை செய்யலாம்:** 

- பரலோகத்தில் இருக்கும் உங்கள் தந்தையிடம் நீங்கள் ஜெபிக்கும்போது அவரை எப்படி சித்தரிக்கிறீர்கள்? எல்லோரும் அவரை வெவ்வேறு வழிகளில் கற்பனை செய்கிறார்கள். அது நல்லது! நீங்கள் தேவனை எப்படி பார்க்கிறீர்கள்?
- தேவன் "அன்பு - அன்பானவர்" என்று விவரிக்கப்படுகிறார்.
- "1 யோவான் 4:19 - அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். நீங்கள் தேவனின் அன்பான கவனிப்பை அனுபவித்திருக்கும் நேரங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தினருடன் பேசுங்கள்.





**ஜெபிப்போம்:**

- பிரபஞ்சத்தின் தேவனான ஒரு அற்புதமான தந்தை நமக்கு இருக்கிறார்!
- ஜெபிக்க சிறப்பு வார்த்தைகள் தேவையில்லை.
- தேவன் எதையும் புரிந்து கொள்கிறார்
- நாம் அவரிடம் சொல்ல விரும்புகிறோம். நீங்கள் ஜெபிக்கும்போது தேவனின் மடியில் நீங்கள் அமர்ந்திருப்பதாக கற்பனை செய்து பாருங்கள்.
- உங்கள் நாளைப் பற்றி அவரிடம் நீங்கள் பேசுவது போல் பேசுங்கள்.
- தேவன் நமக்கு எப்போதும் இருக்கும் சிறந்த தகப்பன்!
- உங்கள் பூமிக்குரிய பெற்றோரை விட அவர் உங்களை நன்றாக கவனித்துக்கொள்கிறார் என்று அவருக்கு நன்றி சொல்லுங்கள்.



## நாள் – 3 : உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக

அப்பா தனது வசதியான நாற்காலியில் அமர்ந்து கேட்டி மற்றும் கென்னிக்காக கைகளை நீட்டினார். அவர்கள் மடியில் உட்கார ஓடினார்கள்! அம்மாவும் அவர்களுடைய புதிய தம்பியும் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்திருந்தார் என்பதால் அது மிகவும் சிறப்பான நாள். அம்மா அவனை ஒரு போர்வையில் போர்த்தி அவனை மெதுவாக அப்பாவின் மார்பில் கிடத்தினாள்! அப்பா அவனை கவனமாக தாங்கினார். கேட்டி குழந்தையை தனது இறுக்கமான சிறிய கைகளில் ஒரு விரலைப் பிடிக்க அனுமதித்தாள். கென்னி மெதுவாக அவன் கன்னத்தை வருடினான். "அவன் அழகாக இருக்கிறான்!" என்றான் கென்னி! "அவரை என்ன பெயர் வைத்து அழைப்போம்?" கேட்டி கேட்டாள்.

"சரி நாங்கள் கேட்டியை பாட்டி பேக்கரின் பெயரால் அழைத்தோம்" "ஏனென்றால் அவர்கள் நாங்கள் சந்தித்த அன்பான நபர்! நாங்கள் கென்னியை தாத்தாவின் பெயரால் அழைத்தோம். ஜான்சன் ஒரு மருத்துவர் என்பதால் முடியாத ஏழை மக்களைக் கவனித்து வந்தார். உங்கள் தாத்தா பாட்டி கருணையால் நீங்கள் ஈர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்!" "உங்கள் புதிய சகோதரனை உங்கள் தாத்தா கிறிஸ்டோபரின் பெயரால் அழைப்போம் என்று நாங்கள் நினைத்தோம். ஒவ்வொரு வாரமும் புலம் பெயர்ந்த குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பித்தார் என்றார் அப்பா. " "உங்கள் பெயர்கள் அனைத்தும் சிறப்பானவை" என்று அம்மா கூறினார். " நீங்கள் இயேசுவைப் போல அன்பாக வளருவீர்கள் என்ற எங்கள் நம்பிக்கையை விவரிக்கின்றது" என்றார். "தேவனுக்கு பல சிறப்பு பெயர்கள் உள்ளன!" என்றார் அப்பா. "ஒவ்வொன்றும் அவரது அன்பான தன்மையைப் பற்றி அற்புதமான ஒன்றை விவரிக்கிறது! அவருக்கு ஆகர் என்ற ஆபிரகாம் மற்றும் சாராவின் எகிப்திய அடிமையால் வழங்கப்பட்ட ஒரு சிறப்பு பெயர் கூட உள்ளது. அவள் அவரை "எல் ரோயி" – "என்னை காண்கின்ற தேவன்" என்று அழைத்தாள். "நான் அதை விரும்புகிறேன்!" "எல் ரோயி! நம்மையும் காண்கின்ற தேவன் அவர்தான்!" என்று கேட்டி புன்னகைத்தாள். "உங்கள் பெயர் பரிசுத்தமாக்கப்படட்டும்!" என்று ஜெபிக்க இயேசு எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்" என்றார் அப்பா. "ஏனெனில் தேவனுடைய பெயர் விசேஷமானது பரிசுத்தமானது. அவருடைய பெயரை அன்பாய் சொல்வதன் மூலம் நாம் அன்புடனும் ஆச்சரியத்துடனும் அவருக்கு நம் அன்பைக் காட்டுகிறோம்.



**இதை செய்யலாம்:** 

- தேவனின் பல்வேறு பெயர்களின் பட்டியலை உருவாக்கவும். அவரைப் பற்றி மேலும் அறியவும்
- பெயர்கள் அவருடைய அன்பான குணத்தைப் பற்றி அவைகள் உங்களுக்கு என்ன சொல்கின்றன?
- தேவனுடன் உங்கள் அனுபவத்தை விவரிக்கும் ஒரு பெயரை நீங்கள் கொடுத்தால் அவரை ஆகரைப் போலவே நீங்கள் அவரை என்ன பெயரால் அழைப்பீர்கள்?





- மீட்பர்
- ரட்சகர்
- யெகோவா

**ஜெபிப்போம்:**

- தேவனின் பெயர்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன் அர்த்தம் என்ன என்பதைக் கண்டுபிடித்து பயன்படுத்தவும். இந்த பெயரால் ஒரு குறுகிய பாராட்டு ஜெபம் செய்யுங்கள்
- தேவனின் பெயர்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை ஒரு துண்டு காகிதம் நடுவில் எழுதுங்கள். பெயரை சுற்றி வணக்கத்தின் குறுகிய சொற்றொடர்களை எழுதுங்கள்.
- யெகோவா என்பது தேவனின் பெயர்களில் ஒன்று. "யா" என்று சொல்லும்போது நாம் உள்ளே சுவாசிக்கிறோம்
- நாம் "வே" என்று கூறும்போது வெளியே சுவாசிக்கிறோம். "யெகோவா" என வணங்கிச் சொல்ல முயற்சிக்கவும்
- நாம் எடுக்கும் ஒவ்வொரு சுவாசமும் தேவனின் பெயரின் புனிதத்தைப் போற்றுகிறது.



**நாள் – 4 : உம்முடைய ராஜ்யம் வருவதாக**

தாவீது ராஜாவைப் பற்றிய பைபிள் கதையை கேட்டி மற்றும் கென்னியிடம் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். தாவீது தனது சிறந்த நண்பரின் நடக்க முடியாத மகன் மெவிபோசேத்திடம் கருணை காட்டினார் என்று விளக்கினார். தாவீது அரசன் மெவிபோசேத்தை தன் அரண்மனையில் குடியிருந்து அவரது மேஜையில் சாப்பிட அழைத்தான் (2 சாமுவேல் 9). தாவீது ராஜா செய்தது மிகவும் அன்பான காரியம்!" என்று கென்னி கூச்சலிட்டான்." தேவன் தாவீதுக்கு எப்படி ஒரு கனிவான ராஜாவாக இருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் ஏனென்றால் தேவன் தயவின் ராஜா" என்றார் அப்பா. "எல்லோரும் அன்பாக இருக்கும் ஒரு ராஜ்யத்தில் வாழ விரும்புகிறேன்" என்று கேட்டி கூறினார். "சரி தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை அறிந்தால் நாம் அவரை நேசிப்போம் மற்றவர்களையும் நேசிப்போம்! இப்போது தேவன் எங்கள் ராஜா நாம் இங்கேயே அவருடைய ராஜ்யத்தில் வாழ்கிறோம்!" என்றாள் அம்மா. " தேவன் உங்கள் இதயத்தின் ராஜாவாக இருக்கும்போது நீங்கள் எங்கிருந்தாலும் அவருடைய ராஜ்யத்தில் வாழ்கிறீர்கள்! தேவனுடைய ராஜ்யம் அவர்களின் வாழ்வில் வாழ வேண்டும் என்று ஜெபிக்கும்படி இயேசு தம் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தார. என்ன ஒரு அற்புதமான ஜெபம்! " "ஆனால் சில ராஜாக்கள் மோசமானவர்களாகவும் பேராசை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் அவர்கள் மக்களின் நிலம் மற்றும் மற்றவரைப் பிடிக்க போர்களைத் தொடங்குகிறார்கள்" என்று கேட்டி சோகமாகத் தெரிந்தாள். "ஆம் அதற்குக் காரணம் அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் ராஜாவாக இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் அதிகாரமும் கட்டுப்பாடும் நிலமும் செல்வமும் வேண்டும் என்று விரும்புகிறார்கள்" என்று அப்பா விளக்கினார். "ஆனால் தேவன் அன்பாக இருக்கிறார் அவர் நம்மைக் கட்டுப்படுத்த விரும்பவில்லை அவர் பேராசை கொண்ட சுயநலவாதி அல்ல. தேவன் நம் அரசராக இருக்கும்போது நாம் மற்றவர்களுடன் அமைதியாக வாழ்கிறோம் நம்முடையதைப் பகிர்ந்து கொள்கிறோம். நாம் பொறுமையாகவும் சிந்தனையுடனும் இருக்கிறோம். இது வாழ மிகவும் மகிழ்ச்சியான வழி! நாம் அப்படி வாழும்போது தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்வது எவ்வளவு நல்லது என்பதை மற்றவர்கள் பார்க்க முடியும்!" "இது ஆச்சரியமாக இருக்கிறது!" கென்னி உற்சாகமாக இருந்தார்! "நான் தேவனுடைய ராஜ்யத்தில் இப்போது சரியாக வாழ விரும்புகிறேன்! இது சிறந்த இடம் போல் தெரிகிறது! " "ஆம் கென்னி!" "மேலும் நாம் நமது நாட்டில் வீட்டில் தேவாலயத்தில் மற்றும் சமூகத்தில் ராஜ்யத்தில் வாழ்கிறோம்! நாம் தேவனுடைய பண்புகள் மூலம் வாழும் போதெல்லாம் அவரது ராஜ்யம் பூமியில் வளர்ந்துள்ளது. ஒரு நாள் நாம் அனைவரும் ஒன்றாக பூமியில் புதிதாக உருவாக்கப்பட்ட பரிபூரண ராஜ்யத்தில் என்றென்றும் எப்போதும் வாழ்வோம்!"



**இதை செய்யலாம்:** 

- தேவனுடைய அன்பின் ராஜ்யம் பூமியின் ராஜ்யங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டது என்பதைப் பற்றி பேசுங்கள்
- காகிதம் அல்லது அட்டையிலிருந்து ஒரு கிரீடம் செய்யுங்கள். நீங்கள் முனைகளை ஒன்றாக ஒட்டுவதற்கு முன் அதை மேசையில் தட்டையாக வைத்து தேவனுடைய ராஜ்யத்தின் பண்புகள் - அன்பு அமைதி மகிழ்ச்சி பொறுமை இரக்கம் நற்குணம் விசுவாசம் சாந்தம் சுயக்கட்டுப்பாடு போன்ற சிலவற்றை எழுதுங்கள் (கலாத்தியர் 5:22-23)
- காகித கிரீட மாதிரி - :https://superstarworksheets.com/wpcontent/uploads/2024/02/KingCrownTemplate.pdf





**ஜெபிப்போம்:**

- உங்கள் வாழ்க்கையின் அன்பான அரசராக இருக்க தேவனை அழைக்கவும்.
- உங்களால் இயன்ற வகையில் உங்கள் ராஜ்ய பண்புகளை வளர்த்துக் கொள்ள உதவுமாறு அவரிடம் கேளுங்கள்
- தேவனுடைய ராஜ்யம் எப்படி இருக்கும் என்பதை மற்றவர்களுக்குக் காட்டுங்கள்.



**நாள் – 5: உம் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூமியிலும் செய்யப்படுவதாக**

அப்பா கேட்டி மற்றும் கென்னிக்கு பரமண்டல ஜெபத்தைப் படித்துக் கொண்டிருந்தார். " உம் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூமியிலும் செய்யப்படுவதாக என்றால் என்ன அர்த்தம்? கென்னி குழப்பமடைந்தான்."இது ஒரு நல்ல கேள்வி கென்னி" " தேவனுடைய சித்தம் எப்படி செய்வது என்று கண்டுபிடிப்பது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்களில் ஒன்று!" என்று அப்பா கூறினார்."ஆனால் அவருடைய சித்தத்தை நாம் எப்படி அறிவது? நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் சொல்வாரோ? கேட்டி கேட்டாள். " சில சமயங்களில் நான் ஜெபிக்கும்போது என்ன செய்வது என்று தேவன் எனக்கு நல்ல யோசனை தருகிறார். உங்கள் அம்மாவை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நான் ஜெபத்தை செய்தபோது தேவனிடமிருந்து ஒரு வலுவான உணர்வை உணர்ந்தேன் அது சரியான செயல் என்று! அது சரியாக இருந்தது!" ""இது ஆச்சரியமாக இருக்கிறது! அம்மாவை தேர்ந்தெடுக்க தேவன் உங்களுக்கு உதவினார்!" குழந்தை கிறிஸ்டோபர் தன் கைகளில் தூங்கிக் கொண்டிருந்ததால் கேட்டி அம்மாவை மென்மையாக அணைத்துக் கொண்டார். "தேவன் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டவே இயேசு வந்தார் இயேசு எப்போதும் தேவனின் சித்தத்தைச் செய்தார்" என்று அம்மா விளக்கினார். " "இயேசு செய்த சில காரியங்களை உன்னால் யோசிக்க முடிகிறதா?" "ஆம்! அவர் எப்போதும் அன்பாகவும் உதவியாகவும் இருந்தார்! "... கென்னி கூறினான். "அவர் மக்களை உருவாக்கினார் அவர் அனைவருடனும் அந்நியர்களுடனும் தொழுநோயாளிகளுடனும் நண்பர்களாக இருந்தார். குழந்தைகள் மற்றும் சோகமாகவும் தனிமையாகவும் இருந்த அவர்களை மகிழ்வித்தார்!" "அது முற்றிலும் சரி, கென்னி!". "நாம் அன்பாக மற்றவர்களை வரவேற்ப்பது எப்போதும் தேவனுடைய விருப்பம் .இருக்கிறோம். நாம் நல்ல விஷயங்களைச் செய்யும் போதெல்லாம், தேவனுடைய சித்தத்தை மட்டும் செய்யாமல், மற்றவர்களுக்கு தேவனுடைய விருப்பத்தை அனுபவிக்க உதவுகிறோம்!" என்றார் அப்பா. "ஏய்! எனக்கு ஒரு சிறந்த யோசனை இருக்கிறது! " கேட்டி அழுதாள். "என் பிறந்த நாள் விரைவில் வரும்! எனக்கு பத்து வயதாக இருக்கும்! நாம் ஏன் தனிமையான சோகமான மக்களுக்கு பத்து வகையான காரியங்களைச் செய்து அந்த நாளைக் கொண்டாடக்கூடாது!" கென்னி ஒப்புக்கொண்டார். "ஆம்! செய்வோம்! இது எப்போதும் சிறந்த பிறந்தநாளாக இருக்கும்! " "பூமியில் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு இது ஒரு அழகான வழி!" "நீங்கள் அதைச் செய்யும்போது கர்த்தருடைய ஜெபத்தை உண்மையில் செயல்படுத்துவீர்கள்!" என்று சம்மதித்தார் அம்மா.

**இதை செய்யலாம்**:







- நாம் எப்பொழுதெல்லாம் கருணை காட்டுகிறோமோ அப்போதெல்லாம் தேவனுடைய சித்தத்தை பரலோகத்தில் உள்ளபடியே பூமியில் செய்கிறோம்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஏதாவது உதவி செய்யுங்கள்.
- காகித இதயங்கள் வெட்டி "கருணை இருந்தது!" என்று ஒவ்வொன்றின் மீதும் எழுதவும். நீங்கள் அன்பாக இருந்த இடங்களில் ஒரு கருணை இதயத்தை விட்டு செல்லலாம்.







**ஜெபிப்போம்**:

- ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது மட்டுமல்ல. அவர் சொல்வதைக் கேட்பதும் ஆகும்.
- பரமண்டல ஜெபத்தை ஒன்றாகச் சொல்லுங்கள் பின்னர் சிறிது நேரம் அமைதியாக இருங்கள்.
- இன்று நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று கேளுங்கள்.
- நாள் முழுவதும் நின்று ஜெபித்து "உங்கள் விருப்பத்தை அறிந்து கொள்ள எனக்கு உதவுங்கள்" என்று கேளுங்கள்.
- நல்ல தேர்வுகளை செய்ய கடவுள் உங்களுக்கு உதவுவார்.



## நாள் – 6: எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தாரும்

விரைவில் கேட்டி மற்றும் கென்னியின் பிறந்தநாள் வந்தது! அவர்கள் மற்றவர்களுக்கு செய்ய முடியும் என்று அவர்கள் பத்து வகையான விஷயங்களைத் திட்டமிட்டனர். தங்களுக்காக அவர்கள் விரும்பிய பரிசுகளின் பட்டியலை எழுதினர். அவர்கள் அப்பாவின் மடியில் ஏறி தங்களுடைய கருணை திட்டம் மற்றும் அவர்களின் விருப்ப பட்டியல்கள் காட்டினார்கள். அப்பா சிரித்தார். “ஓ என்ன நீண்ட பட்டியல்கள்! நான் பார்க்கிறேன்…பொம்மைகள் மேலும் பொம்மைகள் மற்றும் கூட மேலும் பொம்மைகள்!" அவர் அவர்களின் பட்டியலை சத்தமாக வாசித்தார். “உண்மையில் இவற்றில் எவை தேவை?” கென்னிக்கு ஒரு புதிய கடிகாரம் தேவைப்பட்டது. கேட்டிக்கு ஒரு புதிய சைக்கிள் தேவைப்பட்டதுஇ ஏனென்றால் அவளுடைய பழைய சைக்கிள் அவளுக்கு மிகவும் சிறியதாக இருந்தது. அப்பா தலையசைத்தார் “நீங்கள் இருவரும் நல்ல தேர்வுகளை எடுத்திருக்கிறீர்கள்! உங்கள் பிறந்தநாளில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்! ” என்றார். "நான் உங்கள் வயதில் இருந்தபோது, என் குடும்பம் மிகவும் ஏழ்மையில் இருந்தது" “என்னிடம் இருந்ததெல்லாம் என் பிறந்தநாளுக்கு ஒரு சூடான ஸ்வெட்டர். முதலில் நான் ஏமாற்றமடைந்தேன். ஆனால் அது ஒரு மிகவும் குளிர்ந்த குளிர்காலம், பள்ளிக்கு ஒரு நல்ல ஸ்வெட்டர் கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன், ஏனென்றால் நான் என் நண்பர்களுடன் வெளியில் விளையாட முடியும்” பரமண்டல ஜெபத்தை அப்பா தனது வேதாகமத்தில் திறந்தார். “எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தாரும்” என்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்தார். தேவன் நமக்குத் தேவையான அனைத்து அடிப்படை விஷயங்களையும் தருகிறார். ஒரு நாளுக்கும் ஒரு நாள் எங்களை வாழவைக்கவும் அது போதும். அவர் ஏற்கனவே நமக்குத் தேவையான அனைத்தையும் அவர் அறிவார், நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு நல்ல பரிசும் அவரிடமிருந்து வருகிறது ஏனென்றால் அவர் நம்மை நேசிக்கிறார்.". என்று அம்மா கூறினார். "சைக்கிள்கள் மற்றும் கைக்கடிகாரங்கள் கூடவா?" என்று கென்னி கேட்டார். “ஆம், நாங்கள் உங்களுக்குக் கொடுக்கும் அனைத்தும் தேவனிடமிருந்து வந்தவை! உன்னைக் கவனித்துக் கொள்ள வேலை செய்து பணம் சம்பாதிக்க அவர் எனக்கு ஆற்றலைத் தருகிறார்!" என்று அப்பா புன்னகைத்தார். "அதனால் தான் நாம் சாப்பிட உட்காருபோது தேவனுக்கு நன்றி கூறுகிறோம்" என்றார் அம்மா. "தேவன் ஒவ்வொரு நாளும் நம்மை கவனித்துக்கொள்கிறார் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது." தேவாலயத்தில் ஒரு புதிய குடும்பத்துக்கான உணவை டிபன் பாக்ஸ்ல் நிரப்ப எனக்கு யார் உதவ விரும்புகிறார்கள் ? அவங்க அப்பாவுக்கு இன்னும் வேலை இல்லை. அவர்களின் ஜெபத்திற்கான பதில் இன்று ஒருவேளை நாம் ஒருவராக இருப்போம்.” என்று அம்மா கூறினார்.

.





**இதை செய்யலாம்**



- உங்கள் உணவு மேசைக்கான அட்டைகளின் தொகுப்பை உருவாக்கவும். அதில் உணவுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஜெபங்களை எழுதுங்கள்.
- இன்று உணவு தேவைப்படும் குடும்பத்திற்கு எடுத்துச் செல்ல உணவுப் பொட்டலத்தை உருவாக்குங்கள்.
- அனுதின உணவுக்கான அவர்களின் ஜெபத்திற்கு பதிபதிலாகுங்கள்.
- உலகில் உணவுக்காக நன்றி தெரிவிக்கும் பல்வேறு ஜெபங்களைக் கண்டறியவும்





**ஜெபிப்போம்**:

- உங்களை ஆரோக்கியமாக வாழ வைக்க தேவன் இன்று செய்த அனைத்து காரியங்களையும் பட்டியலிடுங்கள் .நீங்கள் தூங்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு சுவாசத்தையும் பற்றி சிந்தியுங்கள். உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பு மற்றும் எல்லாவற்றிற்கும் நன்றி சொல்லுங்கள்.
- நீங்கள் பட்டியலிட்டுள்ள ஒவ்வொன்றும் நம் தந்தையின் அன்பின் பரிசு.



## நாள் – 7: எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்

"நாம் ஒளிந்து விளையாடுவோம்!" கென்னி உற்சாகமாக இருந்தார்! "அது வேடிக்கையாக இருக்கிறது!" கேட்டி கூறினார். கென்னி ஓடி ஒளிந்தபோது அவள் 20 என்று எண்ணினாள். கேட்டி அவர் அம்மா மற்றும் அப்பாவின் படுக்கைக்கு அடியில் மறைந்திருப்பதைக் கண்டார். அவள் மிகவும் உற்சாகமாக இருந்ததால் அவள் படுக்கையில் குதித்தாள். "ஏய் கேட்டி!" கென்னி முகம் சுளித்தார். "அப்பா தங்கள் படுக்கையில் குதிக்க வேண்டாம் இது எங்கள் தாத்தா பாட்டிக்கு சொந்தமானது நினைவில் கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றான்."ஆனால் அது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது!" கத்தினாள் கேட்டி. கென்னி படுக்கையில் குதித்தார். அவர்கள் சிரித்து ஒன்றாக துள்ளினார்கள். திடீரென்று ஒரு பெரிய சத்தம் கேட்க படுக்கை நடுவில் தொங்கியது. " ஐயோ கேட்டி! இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?" கேட்டி பயந்தாள். "ஒளிந்து கொள்ளலாம்!" அவர்கள் கென்னியின் படுக்கைக்கு அடியில் ஊர்ந்து சென்றனர். "கேட்டி! கென்னி! நான் வீட்டிற்கு வந்துவிட்டேன்! நீ எங்கே இருக்கிறாய்?" அப்பா தனது படுக்கையறைக்குள் சென்றார். மீண்டும் அழைத்தான். "கேட்டி! கென்னி! நீ எங்கே இருக்கிறாய்?" அவர் கவலையுடன் ஒலித்தார். அப்பா அவர்கள் அறைக்குள் வந்தார். கேட்டியின் கால்விரல் வெளியே நீட்டிக்கொண்டிருப்பதை அவர் பார்த்தார். "கேட்டி மற்றும் கென்னி" அவர் மெதுவாக அழைத்தார். "படுக்கைக்கு என்ன நடந்தது என்று சொல்லுங்கள்." அப்பாவின் குரல் கனிவாக இருந்தது. கேட்டி வெளியே வந்தாள். ஒரு கண்ணீர் துளி அவள் கன்னத்தில் வழிந்தது. "மன்னியுங்கள் அப்பா " "நாங்கள் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தோம். நாங்கள் உற்சாகம் அடைந்து குதித்தோம். உங்கள் படுக்கை உடைந்துவிடும் என்று எங்களுக்குத் தெரியாது. "இங்கே வா" என்று அப்பா அன்பான புன்னகையுடன் கூறினார். "உண்மையாக இருப்பதற்கு நன்றி கேட்டி. நீங்கள் கீழ்ப்படியாததற்கு வருந்துகிறேன். ஏதோ தவறு நடந்த போது நீங்கள் என்னிடம் சொல்ல பயப்படுவதை நான் விரும்பவில்லை. நாங்கள் எப்போதும் உங்களை மன்னிப்போம்! நான் என் கருவிகளை எடுத்து வருகிறேன் வந்து படுக்கையை சரிசெய்ய எனக்கு உதவுங்கள்.." என்று சொன்னார். அன்று மாலை இரட்டையர்கள் அப்பாவின் மடியில் ஏறினார்கள். "உங்களுக்குத் தெரியுமா நம் தந்தை நாம் அவருக்குக் கீழ்ப்படியாதபோது எப்போதும் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்கிறார்" என்று விளக்கினார். "நாம் ஓடி ஒளிவதை அவர் விரும்பவில்லை! நாம் என்ன தவறு செய்தோம் என்பதை எப்போதும் அவரிடம் சொல்லலாம். மன்னிப்பு கேட்கலாம். நம் தவறுகள் அனைத்தையும் என்றென்றும் துடைப்பதில் அவர் மகிழ்ச்சியடைகிறார்!" "அது அற்புதம்!" என்று கென்னி கூறினார். பரலோகத்திலுள்ள எங்கள் தகப்பன் மிகவும் இரக்கமுள்ளவராக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் மன்னிக்கிறேன்!" கூறினார் அப்பா.



**இதை செய்யலாம்**





- சில குமிழ்களை ஊதவும். குமிழ்கள் உடைவதைப் பாருங்கள். அவைகளை மீண்டும் கண்டுபிடிக்க முடியுமா? நீங்கள் அவற்றை குமிழி கலவையின் பாட்டிலுக்கு திருப்பி அனுப்ப முடியுமா? இல்லை! நம்முடைய மன்னிக்கப்பட்ட பாவங்களைப் போலவே! அவைகள் என்றென்றும் மறைந்துவிட்டன.
- ஒரு தட்டில் மணல் நிரப்பவும். நீங்கள் தவறு செய்ததை மணலில் எழுதுங்கள். மன்னிப்புக்காக ஜெபிக்கும்போது தட்டை மெதுவாக அசைத்து பாருங்கள். உங்கள் தவறுகள் என்றென்றும் மறைந்துவிடும்.





**ஜெபிப்போம்:**

- வெள்ளை களிமண் அல்லது விளையாட்டு மாவைக் எடுத்து அல்லது உப்பு மற்றும் தண்ணீர் சேர்த்து மாவிலிருந்து கடினமான மாவை உருவாக்கவும். நீங்கள் செய்த தவறை நினைவூட்டும் ஏதாவது வடிவத்தை உருவாக்கவும். நீங்கள் மன்னிப்புக்காக ஜெபிக்கும்போது அதைப் பிடித்துக் கொள்ளுங்கள். பின்னர் மாவை ஒரு வெள்ளை இதயம் போல வடிவமைக்கவும். தேவன் உன்னை மன்னித்து மீண்டும் தூய்மையான இதயத்தை உன்னுடையதாக ஆக்கினார்!



## நாள் – 8: மற்றவர்களை மன்னிப்பது போல

கேட்டியும் கென்னியும் அப்பாவிடம் ஓடினார்கள். கேட்டி அழுது கொண்டிருந்தாள். கென்னியும் சோகமாக இருந்தான். "ஓ கண்ணே! இன்று பள்ளியில் என்ன நடந்தது? அப்பா அவர்களை அணைத்துக் கொண்டார். "கொஞ்சம் ஐஸ்கிரீம் சாப்பிட்டுவிட்டு அதைப் பற்றி பேசலாம்." கேட்டி ஒரு பெரிய கரண்டியால் வாயில் ஐஸ்கிரீமை எடுத்துக் கொண்டாள். அது மிகவும் குளிராக இருந்ததால் அது வலித்தது! "கேட்டி மெதுவாக சாப்பிடு!" "நீங்கள் பட்டினி கிடக்கிறீர்களா?" சிரித்தார் அப்பா! "ஆம்!" "பீட்டர் மிகவும் கோபமடைந்து என் மதிய உணவை தரையில் வீசினான்!" "நான் அவனை தொந்தரவு செய்யவில்லை. நான் அவருக்கு அருகில் அமர்ந்திருந்தேன். மிஸ் பீட்டர்சன் தனது ஆப்பிளை எனக்கு சாப்பிட கொடுத்தார்." கேட்டி கூறினார். "ஓ கேட்டி! உங்கள் மதிய உணவு தவறவிட்டதற்கு வருந்துகிறேன்!" அப்பா அவளுக்கு ஆறுதல் கூறினார். "அம்மா உங்களுக்குப் பிடித்தமான உணவை இரவு உணவிற்கு செய்துள்ளார்கள்! உனக்கு என்ன ஆனது? உன்னை மிகவும் வருத்தப்படுத்துவது எது கென்னி?" அப்பா கேட்டார்." பீட்டர் என்னை தள்ளி என் முழங்கால்களை காயப்படுத்தினார்! "ஓ கென்னி! நீங்கள் காயப்பட்டதற்கு வருந்துகிறேன்!" "அப்பா பீட்டர் ஏன் கேவலமாக நடந்து கொள்கிறான்?" கேட்டி கேட்டாள். "அவன் எங்கள் நண்பன்!" "பீட்டர் ஒரு சோகமான நேரத்தை கடந்து செல்கிறான்" என்று அப்பா விளக்கினார். "அவருடைய அப்பா வெளிநாட்டில் வேலை செய்கிறார். அவன் தந்தைக்காக மிகவும் ஏங்குகிறான். மேலும் அவனது பாட்டி அவன் தாயாருக்கு மருத்துவமனையில் உதவுகிறார். "ஆனால் அவன் இன்னும் எங்களை காயப்படுத்தக்கூடாது!" கென்னி அழுதார். "எனக்குத் தெரியும்" "ஆனால் அவன் எவ்வளவு சோகமாக இருக்கிறான் என்பதை நாம் புரிந்துகொண்டால் அவனை மன்னித்து அவனை ஆறுதல்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறியவும் நம்மால் முடியும்." என்றார் அப்பா. பரலோகத்திலுள்ள நம்முடைய தகப்பன் நம்மை மன்னிப்பது போல நாம் மற்றவர்களை மன்னிக்கும்படி இயேசு ஜெபித்தார்." "நாங்கள் பீட்டரை மன்னிக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?" கேட்டி கேட்டார். "மக்களை மன்னிப்பது என்பது எப்போதும் நாம் அவர்களுடன் நண்பர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. அது நாம் பாதுகாப்பாக உணராதபோது மக்களிடமிருந்து விலகி இருப்பது நல்லது "என்று அப்பா கூறினார். "ஆனால் நான் அவரது அம்மாவை அழைத்து நாங்கள் எப்படி உதவுவது என்று பார்க்கிறேன். நாளை பள்ளிக்கு பிறகு அவனை ஐஸ்கிரீமுக்கு அழைப்போம்." "பீட்டர் மிகவும் சோகமாக இருப்பதாக எனக்குத் தெரியாது" "அவனை மன்னிக்கவும் அவனிடம் கருணை காட்டவும் எங்களுக்கு உதவவேண்டுமென்று ஜெபிப்போம். கென்னி அமைதியாக கூறினார்.







**இதை செய்யலாம்:**

- உங்களை காயப்படுத்திய ஒருவரை நினைத்துப் பாருங்கள். ஒரு வேளை நீங்களும் அவர்களிடம் அன்பாக இருக்க வழி யோசிக்கலாம்.
- ”மன்னிப்பு" என்று எழுதப்பட்ட ஒரு காகிதப் பையில் உண்ணக்கூடிய தின்பண்டங்கள் வைக்கவும். ஒரு வட்டத்தில் உட்காருங்கள். உங்கள் இடதுபுறத்தில் உள்ள நபருக்கு "மன்னிப்பு" என்ற பரிசை வழங்கவும். தின்பண்டங்களை எடுத்து உங்களுக்கு ஒரு துண்டு கொடுக்கச் சொல்லுங்கள். பிறகு அவர்களிடம் உள்ள பரிசை அடுத்தவருக்குக் கொடுத்துவிட்டு அவர்களிடம் தின்பண்டங்களை கேட்டு பெற வேண்டும். இந்தச் செயலை மீண்டும் மீண்டும் செய்யவும். இதனால் ஒவ்வொரு நபரும்”மன்னிப்பு" மற்றும் பரிசைப் பெறுவார்கள்.
- இது எப்படி மன்னிப்பை விளக்குகிறது என்று விவாதிக்கவும்.



**ஜெபிப்போம்**:

- இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்தது போல உங்களை காயப்படுத்திய மக்களுக்காக ஜெபம் செய்வோம். தேவன் ஆசிர்வதிக்க ஜெபம் செய்வோம்
- தேவன் உங்களை நேசிப்பதைப் போலவே மற்றவரையும் நேசிக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!



## நாள் – 9: எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்

கென்னி தனியாக கால்பந்து விளையாடினான். திடீரென்று பீட்டர் ஓடி வந்து புதர்களுக்குள் பீட்டரின் பந்தை உதைத்தான்! நேற்றிரவு எல்லோரும் பீட்டருக்காக ஜெபம் செய்தார்கள். கென்னி அவனிடம் அன்பாக இருக்க விரும்பினான். ஆனால் பீட்டர் அவனை மீண்டும் தொந்தரவு செய்தான். "தயவுசெய்து ஆண்டவரே பீட்டரிடம் கருணை காட்ட எனக்கு உதவுங்கள். அவனை நேசிக்கவும் காயப்படுத்தாமல் இருக்கவும் எனக்கு உதவுங்கள்." என்று கென்னி ஜெபம் செய்தான். கென்னி தனது கால்பந்தைக் கண்டுபிடித்த நேரத்தில் கேட்டி பீட்டருடன் பேசிக்கொண்டிருந்தாள். அவளுக்கு உங்களைப் புண்படுத்துபவர்களிடம் கருணை காட்டுங்கள் என்று இயேசு சொன்னது நினைவுக்கு வந்தது. "ஏய் பீட்டர்! நீ பசியுடன் இருப்பீர்கள் என்று நினைத்தேன் உன்னுடன் பகிர்ந்து கொள்ள சில குக்கீகளை கொண்டு வந்துள்ளேன்!." பீட்டர் தயங்கினான். அவன் கேட்டிக்கும் கென்னிக்கும் நேற்று எவ்வளவு மோசமானவன் என்பதை அவன் நினைவு கூர்ந்தான். அவன் அவர்களை காயப்படுத்த விரும்பவில்லை. அவன் உள்ளே கலக்கமடைந்து சோகமாக இருந்தான். காலை உணவு அம்மாவுக்கு செய்ய நேரம் இல்லாததால் அவர் மிகவும் பசியாக இருந்தான். "நன்றி கேட்டி!" பீட்டர் ஒரு குக்கீயை எடுத்தான். அவன் அதை விரைவாக சாப்பிட்டான். கேட்டி அவனுக்கு இன்னொன்றை வழங்கினாள். "கேட்டி மற்றும் கென்னி நான் நேற்று உங்களிடம் தவறாக இருந்ததற்கு மன்னிக்கவும். தயவு செய்து என்னை மன்னியுங்கள்" என்று வெட்கத்துடன் கூறினார். "நிச்சயமாக நாங்கள் செய்வோம்!" கேட்டி கூறினாள். நாங்கள் உன்னைப் பற்றி கவலைப்படுகிறோம்! அப்பா சில சமயம் எங்களை பள்ளிக்குப் பிறகு ஐஸ்கிரீம் சாப்பிட அழைத்துச் செல்வார். இன்று நீ எங்களுடன் வர விரும்புகிறாயா?. "ஆம் நிச்சயம் வருவேன்!" பீட்டர் புன்னகைத்தான். கென்னியும் சிரித்தாள். பீட்டரிடம் கருணை காட்ட சராசரியாக இருப்பதற்கான சோதனை எதிர்க்கவும் தேவன் அவர்களுக்கு உதவினார். "ஏய் பீட்டர்! கால்பந்து விளையாட வா! பீட்டர் அவர்களுடன் இணைந்ததில் கேட்டி மற்றும் கென்னி மகிழ்ச்சியடைந்தனர். பீட்டரின் அம்மாவின் காரை சரிசெய்ய அப்பா உதவினார். மற்றும் அவர்களுக்கான உணவு அம்மாவிடம் இருந்தது. அன்று மாலை கேட்டியும் கென்னியும் அப்பாவின் மடியில் அமர்ந்து ஜெபம் செய்தனர். இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டதை அப்பா வாசித்தார். ஒவ்வொரு முறையும் இயேசு தேவனை முதன்மைப்படுத்தி வேதத்தை மேற்கோள் காட்டுவதன் மூலம் சோதனையும் சாத்தானையும் எதிர்த்தார். அப்போது அப்பா "நான் பீட்டரிடம் தவறாக நடந்துகொள்ளும் சோதனையை எதிர்த்ததற்காக உங்கள் இருவரையும் நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன். நீங்கள் அன்பாக இருக்க உதவுமாறு கேட்டதற்கு பெருமைப்படுகிறேன். இதைத்தான் இயேசு நமக்கு போதித்தார்.



**இதை செய்யலாம்:**






- நீங்கள் என்ன செய்ய சோதிக்கப்படுகிறீர்கள்? “சோதனையை எதிர்க்கும்” வேத வசனம் தேர்ந்தெடுங்கள். ஒரு சிறிய அட்டையில் உங்கள் “சோதனையை எதிர்க்கும்” பைபிள் வசனத்தை எழுதுங்கள். அதை அலங்கரித்து. அதை ஒரு சிறப்பு ஜெப நினைவூட்டலாக வைத்திருங்கள்.





**ஜெபிப்போம்**:

- வயது மூத்தவரின் கையைச் சுற்றி வரையவும். உங்கள் சோதனைகளை கையில் எழுதுங்கள். இது தேவனின் கை என்று கற்பனை செய்து பாருங்கள். உங்கள் எல்லா சோதனைகளையும் அவருடைய கைகளில் வைத்து அவைகளை எதிர்க்க உதவுங்கள் என்று அவரிடம் கேட்கலாம்
- .நீங்கள் எந்த நேரத்திலும் ஜெபிக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு ஒரு நல்ல தேர்வு செய்ய அன்புடன் உதவுகிறார் என்ற எண்ணத்துடன் ஜெபிப்போம்.



## நாள் – 10: என் ஜெபமும் கூட

கேட்டி மற்றும் கென்னி வெள்ளிக்கிழமை இரவுகளை விரும்பினர்! அவர்களுக்கு ஒன்றாக எப்போதும் சிறப்பு ஆராதனை நேரம் இருந்தது. கேட்டியும் கென்னியும் மாறி மாறி ஒரு ஸ்பெஷல் டெசர்ட்டை தயாரித்தனர். சில சமயங்களில் முற்றத்தில் இருந்து பூக்கள், அல்லது அவர்கள் பள்ளியில் செய்த பொருட்களை கொண்டு கேட்டி மற்றும் கென்னி வழக்கமாக மேசையை அலங்கரித்தனர். வெள்ளிக்கிழமை இரவுகள் சிரிப்பு, அணைப்பு, நல்ல செய்தி பகிர்தல், ஆறுதல் சோகம், மற்றும் தேவனுடன் ஒன்றாக நேரத்தை செலவிடுதல் என்று ஆராதனை நேரம் இருந்தது. அப்பா பிஸியாக இருந்தார்... நீண்ட சரம் அறைகள் வழியாக முற்றத்திற்க்கு சென்றது. கேட்டி மற்றும் கென்னி உற்சாகமாகவும் ஆர்வமாகவும்! இருந்தனர். இரவு உணவுக்குப் பிறகு ஜெபத்திற்க்குக் கூடினர். “நாங்கள் இயேசுவின் விசேஷ ஜெபத்தின் வெவ்வேறு பகுதிகளை ஆராய்தோம். எனவே இப்போது நாங்கள் ஒரு புதையல் வேட்டை கண்டுபிடிக்க செல்கிறோம்! கேட்டி மற்றும் கென்னி அப்பாவின் புதையல் வேட்டைகளை விரும்பினர்! அப்பா அவர்களுக்கு சரம் கொடுத்தார் அதை பின்பற்றும்படி கூறினார். அது அவர்களை தனது நாற்காலிக்கு அழைத்துச் சென்றது, அங்கு அவர் அவர்களுக்கு ஒரு பெரிய பரிசைக் கொடுத்தார் - அணைத்துக் கொண்டார்! "இது பரலோகத்தில் இருக்கும் உங்கள் தந்தையின் அணைப்பு என்று கற்பனை செய்து பாருங்கள்!" பின்னர் ஒரு பெரிய இதயத்துடன் ஒரு சுவரொட்டி கண்டுபிடித்தனர். “தேவன் நினைவில் இருக்கும்படி உங்களுக்கு பிடித்த பெயர்களை எழுதுங்கள் அவர் பெயர் புனிதமானது, ”என்றார் அம்மா. ஒரு சரம் அவர்களை ஒரு கிரீடத்திற்கு அழைத்துச் சென்றது, பின்னர் பைபிள் அட்டையின் இதயத்துடன் நம்மீது தேவனின் அன்பான சித்தத்தை அவர்களுக்கு நினைவூட்ட அவர்கள் சமையலறைக்குச் செல்லும் பாதையைப் பின்தொடர்ந்து, ஒரு ரொட்டியைக் கண்டார்கள், பின்னர் தோட்டத்தில் உள்ள ஒரு வாளியில், அவர்கள் சேற்று கற்களைக் கழுவி மன்னிப்பு பற்றி பேசினர். “சேமி இவை சப்பாத் மதிய உணவிற்கு!” என்று எழுதப்பட்ட சில கவர்ச்சியான குக்கீகளை கண்டார்கள். இறுதியாக, அவர்கள் சரத்தில் கட்டப்பட்ட ஒரு சாவியைக் கண்டுபிடித்தனர், மேலும் ஒரு உண்மையான புதையல் பெட்டி! அவர்கள் பெட்டியைத் திறந்தபோது, அவர்கள் வண்ணம் தீட்டவும், எழுதவும் இரண்டு அழகான வேதாகம புத்தகங்களைக் கண்டார்கள்! பரமண்டல ஜெபத்திற்க்காக அம்மா அவர்களுக்கு சில அழகான செயல்களை கற்றுக் கொடுத்தார். "இயேசு எங்களுக்கு ஒரு சிறப்பு பரமண்டல ஜெபத்தை செய்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!" என்று கென்னி கூறினான். "நானும்!" என்று கேட்டி கூறினாள். “அதைக் கற்றுக்கொள்வதற்கான சிறப்பு வழி உருவாக்கியதற்கு அம்மா மற்றும் அப்பாவுக்கு நன்றி."



**இதை செய்யலாம்:**





- உங்கள் வீட்டில் கேட்டி மற்றும் கென்னி கண்டுபிடித்ததைப் போன்ற பரமண்டல ஜெபத்தை விளக்கும் பொருட்களைக் கண்டறியவும். அவற்றை ஒழுங்காக ஒழுங்கமைத்து ஜெபத்தை ஒன்றாகச் சொல்லுங்கள்.
- கர்த்தருடைய ஜெபத்தின் ஒவ்வொரு சொற்றொடரையும் விளக்குவதற்கு படங்களை வரையவும்.
- ஒவ்வொரு சொற்றொடரையும் ஒரு காகித தடத்தில் எழுதி, ஒரு பாதையை உருவாக்கி, ஜெபத்தின் வார்த்தைகளை மனப்பாடம் செய்யும்போது நடந்து செல்லுங்கள். நடைப்பயணத்தை பல முறை செய்யவும்.





**ஜெபிப்போம்**:

- பரமண்டல ஜெபத்திற்கு சில செயல்களைச் செய்யுங்கள் - செயல்கள் மூளை நன்றாக நினைவில் வைக்க நமக்கு உதவுகின்றன
- ஒரு பழக்கமான பாடலைத் தேர்ந்தெடுத்து பரமண்டல ஜெபத்திற்கு ராகம் போட்டு அழகாக மாற்றவும்.
- கர்த்தருடைய ஜெபத்தின் வெவ்வேறு கருப்பொருள்களைப் பயன்படுத்தி உங்கள் சொந்த வார்த்தைகளில் ஒத்த எண்ணங்களை வெளிப்படுத்தும் பதிப்பை எழுதுங்கள்.



# பரமண்டல ஜெபம் (கை அசைவுகளுடன்)



**பரமண்டலங்களில் இருக்கின்ற**: இரு கைகளையும் மேலே உயர்த்தவும்

**எங்கள் பிதாவே:** இரு கைகளையும் மார்பில் காட்டி தன் உடலை அணைத்துக்கொள்ளவும்

**உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக:** ஜெபத்தில் கைகளை இணைக்கவும்

**உம்முடைய ராஜ்யம் வருவதாக**: இரு கைகளாலும் பரலோகத்தை வானத்திலிருந்து உங்கள் மார்புக்கு இழுக்கவும்

**உம்முடைய சித்தம்** : முழங்கைகளை உங்கள் பக்கமாக மடித்து அதே நேரம் இரு கைகளாலும் உங்கள் தோள்களைத் தொடவும்

**பரலோகத்தில் செய்யப்படுவது போல்**: பரலோகத்தைக் குறிக்க கைகளை மேலே விரிக்கவும்

**பூமியிலும் செய்யப்படுவதாக**: கைகளை விரித்து தரையை குறிக்கவும்

**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை**: இடது கையை ரொட்டித் துண்டாகப் பயன்படுத்தி உண்ணும் செயலைச் செய்ய வலது கையைப் பயன்படுத்தவும்

**இன்று எங்களுக்குத் தாரும்**: பெறும் நிலையில் கைகளை வெளியே கொண்டு தொடங்கி அதே நேரத்தில் கைகளை மூடி பின்னர் அவற்றை உள்நோக்கி வரையவும்

**மற்றவர்களை மன்னிப்பது போல**: இரு கைகளையும் பயன்படுத்தி எதையோ தூக்கி எறிவது போல எறிந்து விடவும்

**எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்**: தன்னை சுட்டி பின்னர் இரு கைகளையும் பயன்படுத்தி எதையோ தூக்கி எறிவது போல எறிந்து விடவும்

**எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்:** கைமுட்டிகளை மூடி வைத்து, மணிக்கட்டுகளை ஒன்றாக கட்டியபடி குறுக்கவும்

**தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்**: திடீரென்று விடுவிக்கப்பட்டது போல் மணிக்கட்டுகளை பிரிக்கவும்

**இராஜ்யமும்**: இரண்டு கைகளையும் உங்கள் தலையில் வைத்து விரல்களை மேல்நோக்கிச் சுட்டி ஒரு கிரீடம் செய்யவும்

**வல்லமையும்**: இரு கைகளையும் பயன்படுத்தி வலிமையைக் காட்டவும்

**மகிமையும்**: தலைக்கு மேல் கைகளை ஒன்றாக உயர்த்தி அவற்றை கீழே மற்றும் ஒவ்வொரு பக்கமாக வெளியே கொண்டு வரவும்

**என்றென்றும் உம்முடையவைகளே**: கைகள் இரண்டும் படிகளில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரே நேரத்தில் நகர்த்தவும்

**ஆமென்**: ஜெபத்தில் கைகளை இணைக்கவும்

**வெற்றிடங்களை நிரப்பவும்:**

 ------------------------------------------------ எங்கள்  --------------------------,

உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;

உம்முடைய  ------------------------------- வருவதாக;

உம்முடைய சித்தம்  ----------------------------------

செய்யப்படுகிறதுபோல  ---------------------------------

செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய  -------------------------------இன்று
எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள்  -----------------------------

எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், 

------------------------------ எங்களை இரட்சித்துக்கொள்ளும், -------------

 ----------------------------,  ----------------------------------, 

------------------------------------ என்றென்றைக்கும்

உம்முடையவைகளே,  -----------------------------------